செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி.

* 24 வினா.—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடை யளிப்பாரா—

மேலூர் வட்டம் செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்று அமைப்பதற்கான செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லே. செந்துறையில் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு ஏதுவும் இல்லே.

திரு. பெ. மலேச்சாமி : ஒரு பயணிகள் விடுதியை அமைக்க வேண்டுமென்றால் என்னென்ன காரணங்களைக் கொண்டு அரசு அதை அமைக்கிறது? அந்தக் காரணங்கள் இந்த ஊரைப் பொறுத்தமட்டில் சரியாக இல்லே என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த ஊருக்கு அருகாமை யில் மேலூர், நந்தம், கொட்டம்பட்டி இவைகளில் ஏற்கனவே பயணிகள் விடுதிகள் இருக்கின்றன. அங்கிருந்து ஒரு மணி நேரம் பயணம் செய்தால் மதுரை செல்ல முடியும். அங்கு செல்கிற பயணிகள் மதுரை போன்ற இடங்களில் தங்கிக் கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆகவே, இந்த இடத்தில் பயணிகள் விடுதி அவசியமில்லே என்று கருதப்படுகிறது.

திரு. மு. ச. சிவசாமி : டவுன் பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றி லும் ஒவ்வொரு பயணிகள் விடுதி கட்ட உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள் 25, 26 தள்ளி வைக்கப்படுகின்றன.

City Compensatory Allowance for aided school teachers

* 27 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) Whether any representation has been received from aided school teachers for the grant of City Compensatory Allowance : and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம், ஐயா.

(இ) சென்னே மாநகரின் எல்லேகளுக்குள்ளும், சென்னே மாநகரை அடுத்துள்ள சில பகுதிகளிலும், மதுரை நகரின் நகராட்சி எல்லேகளுக்குள்ளும் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு, நகர ஈட்டுப்படித் திட்டத்தை 1—3—1968 முதற் கொண்டு அரசாங்கம் நீட்டித்துள்ளது. மாநில அரசாங்கப் பணி யாளர்களுக்கு எந்தச் சம்பள வரம்புவரை நகர ஈட்டுப்படி வழங்கப்படுகிறதோ அதே வரம்புவரை மேற்குறிப்பிட்ட ஆசிரியர் களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும்.

1969 சனவரி 29]

THIRU T. MARTIN : Mr. Deputy Speaker, Sir, may I request the Hon. Minister to state whether there is any proposal pending now before the Government for merging the Dearness Allowance and the City Compensatory Allowance with the basic salary or the pay of the Gnvernment servants of this State?

THE HON. THIRU S. MADHAVAN : No, Sir.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the teachers working in private aided schools are not given house rent allowance as is being given to other categories of teachers and if so, will the Government be pleased to grant them house rent allowance also?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போடவும்.

தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் அளித்தல்) சட்டம்.

* 28 வின.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (லேசென்ஸ்) சட்டம் 1965 [The Madsas Public Buildings (Licensing) Act, 1965] பற்றி தமிழ்நாடு வர்த்தகக் கழகம் தனது அதிருப்தியை சுட்டிக் காட்டி அரசுக்கு விண்ணப்பம் எதுவும் அனுப்பியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அரசு அது பற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வர்த்தகக் கழகம் தமிழ்நாடு 1965-ம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் அளித்தல்) சட்டத்தை [The Madras Public Buildings (Licensing) Act, 1965] ரத்துச் செய்யும்படி விடுத்துள்ள கோரிக்கையை, அரசு நன்கு பரிசிலனை செய்து, மேற்படி சட்டத்தை ரத்துச் செய்ய இயலாது என பதில் அளித்துள்ளது.

திரு. ந. தருமலிங்கம் : அரசிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை என்று சுட்டிக்காட்டி தமிழ்நாடு வர்த்தகக் கழகத்தின் மாநிலக் குழு அரசாங்கத்தைக் கண்டித்து தீர்மானம் இயற்றியிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற தகவல் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மற்ற வினக்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. வினக்கள்-விடைகள் முடிவுற்றன.